01.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகளுக்கு மானிய விலையில் பொருள்கள் வழங்கல்

தாராபுரம் அருகே நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் பொருள்கள் புதன்கிழமை வழங்கப்பட்டன.

தாராபுரம் அருகே மாம்பாடியில், ஈரோடு மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்ட முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

இதற்கு ஊராட்சித் தலைவர்களான சக்திவேல், தண்டபாணி, முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், நீர்வடிப்பகுதி தலைவர்கள், செயலர்கள், சங்க உறுப்பினர்கள், விவசாயிகள், சுயஉதவிக் குழுவினர், கூட்டமைப்பு உறுப்பினர்கள் பலர் பங்கேற்றனர்.

முகாமில், நாதம்பாளையம், பெரமியம் ஊராட்சிகளில் உள்ள 10 நீர்வடிப்பகுதி விவசாயிகளுக்கு பண்ணை உற்பத்தித் திட்டத்தின் கீழ் 80 சதவீத மானிய விலையில் தட்டைப் பயறு, கொள்ளு, பாசி, உளுந்து, நரிப்பயறு உள்பட ரூ.31 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான பொருள்கள் வழங்கப்பட்டன.

இதேபோல், வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 40 சுயஉதவிக் குழுக்களுக்கு கால்நடை வளர்ப்பிற்கு ரூ.9 லட்சத்து 16 ஆயிரம் சுழல் நிதியும், 12 கூட்டமைப்புகளுக்கு சிறுதொழில் தொடங்க ரூ.17 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் 80 சதவீத மானிய விலையில் தையல் இயந்திரம், மேஜை, நாற்காலி உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் வழங்கப்பட்டன. இந்த முகாமுக்கான ஏற்பாடுகளை மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள் மகேஸ்வரி, பூபதி ஆகியோர் செய்திருந்தனர்.

## பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும்: டீமா சங்கம்

நூல் விலையைக் குறைக்க பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும் என திருப்பூர் ஏற்றுமதியாளர் மற்றும் உற்பத்தியாளர் சங்கம் (டீமா) வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து டீமா சங்கத் தலைவர் எம்.பி.முத்துரத்தினம் கூறியதாவது: நூல் விலை கிலோவுக்கு ரூ.15 வீதம் அதிகரித்துள்ளது. இந்த விலையேற்றும் இன்னும் அதிகமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலும் நூல் விலை அதிகரித்தால் பின்னலாடைத் தொழிலைச் செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே, நூல் விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாகப் பஞ்சு விலை அதிகரிக்காத காரணத்தால் நூல் விலையும் உயரவில்லை. தற்போது மீண்டும் பஞ்சு விலை அதிகரிப்பால் நூலின் விலையும் உயர்ந்துள்ளது. சீனாவுக்கு இங்கிருந்து பஞ்சு, நூல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் எண்ணற்ற நூற்பாலைகள் இருந்தும் வெளிநாட்டில் இருந்து நூல் இறக்குமதி செய்யும் நிலை உள்ளது.

உள்நாட்டு நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சு கொடுக்கப்படாமல், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பஞ்சு ஏற்றுமதியை மத்திய, மாநில அரசுகள் தடை செய்ய வேண்டும் என்று பலமுறை கோரிக்கை விடுத்துள்ளோம். நமது தேவையே பூர்த்தி செய்யப்படாத நிலையில், பஞ்சு ஏற்றுமதி செய்வது சரியானது அல்ல. எனவே, பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும் என மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

பஞ்சு விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது அரசின் கடமை. நூற்பாலைகளும் பஞ்சு விலையைக் குறைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். பஞ்சு ஏற்றுமதியைத் தடை செய்யுமாறு ஜவுளித் துறையில் உள்ள அனைத்து அமைப்புகளும் வலியுறுத்த வேண்டும் என்றார்.

## மேலபச்சக்குடியில் விவசாயிகளுக்கு பாரம்பரிய வேளாண்மை பயிற்சி

விராலிமலை அருகேயுள்ள மேலபச்சக்குடி தொகுப்பு கிராமத்தில் தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்கத் திட்டத்தின் கீழ் பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்ட விவசாயிகள் பயிற்சி திங்கள்கிழமை தொடங்கி மூன்று நாட்கள் நடைபெற்றது.

விராலிமலை வேளாண்மை உதவி இயக்குநர் பெ. எட்வர்ட்சிங் தலைமை வகித்து, பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் குறித்து பேசினார். ஊராட்சித் தலைவர் நல்லுசாமி முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக ஒன்றியக் குழு உறுப்பினர் மருதை பங்கேற்றார்.

3-ம் நாள் பயிற்சியில் கோவை அங்ககச் சான்றளிப்பு துறை வேளாண்மை அலுவலர் சுரேந்தர், அங்ககச் சான்றளிப்பு மற்றும் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். அங்கக வேளாண்மையின் முன்னோடி விவசாயியான வயலோகத்தைச் சேர்ந்த முத்தையா பராம்பரிய நெல் ரகங்கள் குறித்தும், சிறுதானியங்கள் சாகுபடி குறித்தும் தன்னுடைய அனுபவங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறியதோடு, மண்புழு உரம் குறித்து செயல்விளக்கம் அளித்தார்.

உதவி விதை அலுவலர் இரா. பூபதி வரவேற்றார். பயிற்சியில் 50 விவசாயிகள் பங்கேற்றனர். உதவி வேளாண்மை அலுவலர் இரா. சேகர் நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவித் தொழில்நுட்ப மேலாளர் சுப்பிரமணி, கலைச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர்.

## "விவசாயிகள் குழுவாக இணைந்து செயல்பட்டால் லாபம் அதிகரிக்கும்'

உற்பத்தி செய்யப்பட்ட வேளாண் பொருட்களை விவசாயிகள் குழுவாக இணைந்து விற்பனை செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்றார் நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் எஸ். சோமசுந்தரம்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள மாங்காட்டில் பைந்தமிழ் உழவர் மன்றம் தொடக்க விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு தலைமை வகித்து, உழவர் மன்றத்தை தொடங்கி வைத்து மேலும் அவர் பேசியது:

தற்போதைய விவசாய முறைகள் விவசாயிகளுக்கு லாபத்தை அதிகரிக்கும் வகையிலேயே உள்ளன. விவசாயிகளுக்கு சாகுபடி முறைகள், இடுபொருட்கள், கடனுதவி என பல்வேறு விதமான உதவிகளை அரசு செய்கிறது. எனவே, விவசாயிகள் ஒன்றிணைந்து குழுவாக செயல்பட வேண்டும்.

அந்தந்தப் பகுதி விவசாயிகள் ஒன்றுசேர்ந்து ஒரே விதமான பயிர்களை சாகுபடி செய்தால், அதை எளிதில் சந்தைப்படுத்துவதோடு, அதிக விலைக்கு விற்பனை செய்யவும் முடியும். கடினமாக உழைத்து பயிர் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், இறுதியில் வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்துவதில் முழுமையாக அக்கறை காட்டுவதில்லை என்பதால் பாதிக்கப்படுகின்றனர் என்றார்.

நிகழ்ச்சியில், விருத்தி வேளாண் ஆலோசனை மையத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே. நாராயணன், திருவரங்குளம் வேளாண் உதவி இயக்குநர் எம். சக்திவேல், அம்புலி ஆறு விவசாய உற்பத்தியாளர் நிறுவன முதன்மை செயல் அலுவலர் ஆர். சகுந்தலா உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர். நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

## வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் அமைச்சர் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுக் கடன் சங்கங்களில் அமைச்சர் செல்லூர் ராஜூ புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

திருப்போரூர் ஒன்றியத்தில் செயல்படும் திருப்போரூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ஆய்வு செய்த அமைச்சர், சங்கத்தின் கணக்குகள் யாவும் கணினி மூலம் உடனுக்குடன் பதிவு செய்யப்படுவதையும், இணையதளத்தில் உள்ளதையும் பார்வையிட்டார்.

இச் சங்கத்தில் வேளாண்மைக் கடன் தள்ளுபடி 2016 திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாய பயனாளிகளின் விவரங்கள் குறித்து சங்கச் செயலரிடம் கேட்டறிந்து இது தொடர்பான கடன் பதிவேடுகள், தொடர்புடைய கடன் ஆவணங்கள், சங்க உறுப்பினர்களின் புத்தகம் ஆகியவைகளைப் பார்வையிட்டார். மேலும் இச் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் மின்னணு சேவை மையத்தின் மூலமாக வழங்கப்பட்டு வரும் வருவாய்ச் சான்றிதழ், சமூக நலச் சான்றிதழ், பட்டா ஆகியவை குறித்தும் ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது இச் சங்கத்துக்கு புதிதாக நவீன அலுவலகக் கட்டடம் கட்ட கோரிக்கை வைத்தனர். அதற்காக இச் சங்கம் அமைந்துள்ள இடம் தொல்பொருள் ஆய்வுத் துறை கட்டுப்பாட்டில் வருவதாக அலுவலர்கள் தெரிவித்தனர். இத் துறையிடமிருந்து உரிய சான்றிதழைப் பெற்று கருத்துருவை அனுப்பி வைக்குமாறு அமைச்சர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து செய்யூர் வட்டத்தில் செயல்படும் கடப்பாக்கம் தொடக்க

வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை அமைச்சர் ஆய்வு செய்தார். சங்கத்தின் ரொக்கக் கையிருப்பை ஆய்வு செய்து சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயிர்க் கடன்கள் குறித்த பதிவேடுகளை ஆய்வு செய்தார்.

பின்னர் இச் சங்கத்தின் கணக்குகள் கணினி மூலம் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து சங்கச் செயலருக்கும், அதிகாரிகளுக்கும் அறிவுரைகள் வழங்கினார். இச் சங்கத்தின் மூலம் நடத்தப்படும் 12 நியாய விலைக் கடைகளின் செயல்பாடுகள் குறித்தும், கடையில் பணிபுரியும் விற்பனையாளர்கள் குறித்தும் கேட்டறிந்தார். அனைத்து நியாய விலைக் கடைகளையும் உரிய நேரத்தில் திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களை தடையின்றி உடனுக்குடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு அரசு உணவு, கூட்டுறவுத் துறை முதன்மைச் செயலர் பிரதீப் யாதவ், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் இரா.பழனிச்சாமி, கூடுதல் பதிவாளர்கள் எம்.ராஜசேகர், கே.ராஜேந்திரன், இரா.கார்த்திகேயன், காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் மரகதம் குமாரவேல், திருப்போரூர் சட்டப்பேரவை உறுப்பினர் எம்.கோதண்டபாணி, செய்யூர் சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் வி.எஸ்.ராஜி, காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவர் இ.கிருஷ்ணமூர்த்தி, காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர் கு.ரவிக்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## மீனவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கல்பாக்கத்தில் உள்ள சென்னை அணுமின் நிலைய நிர்வாகம் கல்பாக்கம் அருகே உள்ள மீனவர்களுக்கு ரூ. 3.47 லட்சம் மதிப்பிலான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை திங்கள்கிழமை தொடங்கியது.

கல்பாக்கத்தில் ஒரு பிரிவில் சென்னை அணுமின் நிலையம் இயங்கி வருகிறது. இந்த அணு மின் நிலையத்தில் பெரு நிறுவன சமூக பொறுப்புத் திட்டத்தில் அருகாமை கிராமங்களின் உள்கட்டமைப்பு உள்பட பல்வேறு வசதிகளை மேம்படுத்தி வருகிறது. இந் நிலையில் மீனவர்களின் நிலைத்த வாழ்வாதாரத்துக்காக திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ரூ. 3 லட்சத்துக்கு 47 ஆயிரம் மதிப்பில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் அளிக்கப்பட உள்ளது.

இதில் முதல் கட்டமாக மீன்களை மதிப்பு கூட்டப்பட்டதாக மாற்றும் வகையில் பதப்படுத்தப்பட்ட மீன் உணவு, மீன், இறால் ஊறுகாய்கள் தயாரிப்பு என புதுப்பட்டினம், சதுரங்கப்பட்டினம், உய்யாலிகுப்பம் ஆகிய பகுதி மீனவ

பெண்கள் 25 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் அணுமின் நிலைய முதன்மைக் கண்காணிப்பாளர் வெங்கடாசலம், சமூக பொறுப்புக் குழுத் தலைவர் சுரேஷ், மனிதவள மேலாளர் நிர்மலாதேவி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## ராஜபாளையம் வாரச் சந்தையில் பச்சை மிளகாய் விலை குறைவு

ராஜபாளையம் வாரச் சந்தையில் சில வாரங்களுக்கு முன் கிலோ ரூ.200-க்கு விற்ற பச்சை மிளகாய் வியாழக்கிழமை ரூ.30ஆக குறைந்தது. அதே போல் கிலோ ரூ.80 முதல் ரூ.120 வரை விற்ற எலுமிச்சம்பழம் தற்போது, முதல் தரமான பழம் கிலோ ரூ.50-க்கும், பொடிவட்டு பழம் கிலோ ரூ.30-க்கும் விற்றது. கேரளா இஞ்சி கிலோ ரூ.160-க்கும், தமிழ்நாடு இஞ்சி கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரையும் விற்கப்பட்டன. கேரள மிளகு கிலோ ரூ.750 முதல் ரூ.840 வரை விற்கப்பட்டது. கிலோ ரூ.400-க்கு விற்ற பாக்கு ரூ.350 ஆக விலை குறைந்திருந்தது.

## தொடர் மழையால் தென்னை நார் உற்பத்தி பாதிப்பு

தொடர் மழை காரணமாக தென்னை நார் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தொழிலாளர்கள் வேலையின்றி முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உடுமலை, பொள்ளாச்சி, தாராபுரம் பகுதிகளில் தென்னை உற்பத்தி அதிக அளவில் இருப்பதால் இந்தப் பகுதிகளில் சுமார் 250-க்கும் மேற்பட்ட பெரிய மற்றும் சிறிய அளவிலான தென்னை நார் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

இங்கு தயாராகும் தரமான தென்னை நார்கள் கேரளத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அங்கு மிதியடி, மெத்தை, ஷோபாசெட் போன்ற மதிப்பூட்டுக் கூட்டப்பட்ட பொருள்களாகத் தயாரிக்கப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இதற்காக நாள்தோறும் ஆயிரக்கணக்கான டன் தென்னை நார்கள் இந்தப் பகுதிகளில் இருந்து அனுப்பிவைக்கப்படுகிறது.

இந்நிலையில், கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருவதால், தென்னை நார் உற்பத்தித் தொழில் முடங்கிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது. தென்னை நார் அதிக அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதால், உற்பத்தியை மீண்டும் உற்பத்தியைத் தொடங்கவும், அதற்கான முதலீடுகள் செய்யவும்

உரிமையாளர்கள் தயங்கி வருகின்றனர். அதன் காரணமாக தொழிற்சாலைகளில் பணியாற்றி வரும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தென்னை நார் உற்பத்தியாளர்கள் கூறியதாவது:

தென்னை நார்களை வெயிலில் உலர்த்தும் போதுதான் அதன் தரம் உயரும். தற்போது, தொடர்ந்து மழை பெய்து வருவதால் தென்னை நார்களை உலர்த்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கேரளத்திலும் மழை பெய்து வருவதால் இங்கு உற்பத்தியாகும் நார்களை வாங்க அந்த மாநில வியாபாரிகள் தயங்கி வருகின்றனர்.

இதனால், உற்பத்தி செய்யப்பட்ட தென்னை நார்கள் அதிக அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மழையின் காரணமாக தென்னை நார்களைப் பாதுகாப்பாக வைக்க வேண்டிய சூழ்நிலையில், அதற்கென கூடுதல் செலவு ஏற்படுகிறது.

தொழிலாளர்களுக்கு முடிந்த அளவு வேலைவாய்ப்புத் தருகிறோம். மழை தொடர்ந்து பெய்யும் பட்சத்தில் மேலும் பாதிப்புகள் ஏற்பட்டு, வேலைவாய்ப்பும் அளிக்க முடியாத நிலை ஏற்படலாம் என்றனர்.

## விவசாயிகள் மானியம் பெற அழைப்பு

அரியலூர் மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் வியாழக்கிழமை ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் அவர் தெரிவித்தாவது: அரியலூர் மாவட்டத்தில் உரங்கள் தற்பொழுது வேளாண்மை விரிவாக்க மையம், கூட்டுறவுத் துறை மற்றும் தனியார் துறை என மொத்தம் 191 மெ. டன் நெல் விதைகள் இருப்பில் உள்ளன. குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தின் கீழ் 1,000 ஏக்கரில் இயந்திர நெல் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 267 ஏக்கர் சாதனை அடையப்பட்டுள்ளது. விசை உழுவை இயந்திரம் (பவர் டில்லர்) 50% மானிய விலையில் அதிக பட்சமாக இயந்திரம் ஒன்றுக்கு ரூ.75,000 வீதம் 50 பேருக்கு வழங்கிட ரூ.37.5 லட்சம் இலக்கீடு பெறப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - பயறு வகைகளை விநியோகம் செய்திட கிலோ ஒன்றுக்கு ரூ.15 வீதம் மானிய விலையில் வழங்கிட 5 மெ.டன்களுக்கு ரூ.75 லட்சம் பெறப்பட்டுள்ளது. வரிசை விதைப்பு முறையில் பயிரிடும் பயனாளிகளுக்கு பின்னேற்பு மானியமாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 500 ஹெக்டேரில் வழங்கிட ரூ.5 லட்சம் இலக்கீடு பெறப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - எண்ணெய் வித்து உற்பத்தி பெருக்கத் திட்டத்தின் கீழ் 500

ஹெக்டேர் பரப்பில் விதை விதைப்புக் கருவி கொண்டு நிலக்கடலை விதைப்பு செய்வதற்கு ஹெக்டேருக்கு ரூ.1,000 வீதம் மானியமாக வழங்கிட ரூ.5 லட்சம் இலக்கீடு பெறப்பட்டுள்ளது. மேலும், நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஜிப்சம் இடுவதற்காக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.750 வீதம் 300 ஹெக்டேருக்கு 50 சதவீத மானிய விலையில் வழங்கிட ரூ.2.25 லட்சம் இலக்கீடு பெறப்பட்டுள்ளது.

எனவே,வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் விவசாயிகள் பயன் பெற தங்களது பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களைத் தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்தார்.

## ஆந்திரத்திலிருந்து 2,650 டன் உரம் வருகை

திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்ட குறுவை சாகுபடிக்கு 2,650 டன் உரம் வந்துள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன்.

திருவாரூர் ரயில் நிலையத்துக்கு வியாழக்கிழமை ஆந்திர மாநிலத்திலிருந்து மாவட்ட குறுவைக்குத் தேவையான உரங்கள் வந்தது. இங்கு வந்த உரங்களை ஆட்சியர் மதிவாணன் பார்வையிட்டார். அப்போது அவர் பேசியது: மாவட்டத்தில் தற்போது குறுவை சாகுபடி பணிகள் நடைபெற்று வருகிறது. பயிர் வளர்ச்சிக்குத் தேவையான மேலுரம் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி கிடைக்க, மேலுரம் இடுவத ற்கு தேவையான நீம்யூரியாவை இப்கோ நிறுவனம் மூலம் ஆந்திரத்திலிருந்து 2,650 டன் வரவழைக்கப்பட்டு, அதில் திருவாரூர் மாவட்டத்துக்கு 1,650 டன் உரம் 54 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 1,000 டன் உரம் நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. மேற்கண்ட வேம்பு கலந்த யூரியாவை இடுவதன் மூலம் தழைச்சத்து நீண்ட நாட்களுக்கு பயிருக்கு கிடைப்பதால் நெல் மகசூல் உயரும் என்றார் மதிவாணன்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த. மோகன்ராஜ், வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகனன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ராஜேந்திரபிரசாத், கோட்டாட்சியர் முத்துமீனாட்சி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## குறுவை பருவத்திற்கேற்ற புதிய ரகங்கள்: வேளாண் விஞ்ஞானிகள் பரிந்துரை

குறுவை பருவத்துக்கேற்ற புதிய நெல் ரகங்கள் குறித்து விவசாயிகளுக்கு நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முனைவர் இராஜா.ரமேஷ் மற்றும் முனைவர் ரெ.பாஸ்கரன் ஆகியோர் விவசாயிகளுக்கு பரிந்துரை வழங்கியுள்ளனர். அதன் விவரம் வருமாறு:

கோயம்புத்தூர் 51:

2013-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த ரகம் 105 முதல் 110 நாள்கள் வயதுடையது. தூர் பிடித்து சாயாத தன்மை கொண்டது.

ஹெக்டருக்கு 6,623 கிலோ விளைச்சல் அளிக்கவல்லது. மத்திய சன்ன ரக வெள்ளை நிற அரிசி. குலைநோய், பச்சை தத்துப்பூச்சி மற்றும் புகையான் பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது.

எம்டியு 6:

2015-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த ரகம் 110-115 நாள்களைக் கொண்ட குறுகிய கால ரகமாகும். எம்டியு 5 மற்றும் ஏசிம் இணைந்து உருவாக்கப்பட்ட ரகம். சராசரி மகசூலாக இறவையில் ஹெக்டருக்கு 6118 கிலோ. ஏடிடீ 43-ஐ விட 9.8 சதம் மற்றும் ஏடிடீ 45-ஐ விட 10.2 சதம் அதிக மகசூல் தரவல்லது. இலை சுருட்டுப்புழு, தண்டு துளைப்பான், பச்சை தத்துப்பூச்சி மற்றும் வெண்முதுகுப் பூச்சி ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத் திறன் உடையது. இந்த ரகத்தை தமிழ்நாட்டில் சொர்ணாவாரி, கார், குறுவை, நவரை ஆகிய பருவங்களிலும் ஏனைய குறுகிய கால ரகங்கள் சாகுபடி செய்யும் பகுதிகளிலும் பயிரிடலாம்.

நீண்ட சன்ன அரிசியை உடைய இந்த ரகம் சிறந்த சமையல் பண்புகளை உடையது. பச்சரிசியாக பொங்கல், அவல் மற்றும் பொரி தயாரிப்பதற்கு மிகவும் ஏற்றது.

திருப்பதிசாரம் 5 (டிபிஎஸ்5):

2014-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ரகம். ஒரு ஹெக்டருக்கு சராசரியாக 6,300 கிலோ விளைச்சல் தரவல்லது. அம்பை 16 ரகத்தை விட 14 சதம் அதிக விளைச்சல் தரவல்லது.அம்பை 16 மற்றும் ஏடிடீ 37 இணைத்து உருவாக்கப்பட்டது. 118 நாள்கள் வயதுடையது. தண்டு துளைப்பான், இலை

சுருட்டுப் புழு மற்றும் புகையான் பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது. நல்ல அரவைத்திறன் கொண்ட இந்த ரகத்தின் அரிசி குறுகிய தடிமனானது. அரிசியின் அமைலோஸ் இடைப்பட்ட அளவில் இருப்பதால் சமைக்க உகந்தது. இவ்வாறு அந்த பரிந்துரையில் வேளாண் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பப்பாளியில் மாவுப்பூச்சி கட்டுப்பாட்டு முறைகள்



பப்பாளியில் மாவுப்பூச்சி தாக்குதல் அறிகுறிகள் இருந்தால் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து தோட்டக்கலைத்துறையின் வேளாண் அலுவலர்கள் களப்பயிற்சி அளித்து வருகின்றனர். பப்பாளியில் மாவுப்பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்: தாக்கப்பட்ட இலை மற்றும் காய்களில் வெண்ணிற பஞ்சால் மூடப்பட்டது போல் காணப்படும். மஞ்சள் நிறமான காய்ந்த, வளைந்து, நெளிந்த வளர்ச்சி குன்றிய குருத்துகள் காணப்படும். சிவப்பு மற்றும் கருப்பு எறும்புகளின் நடமாட்டம் இருக்கும். பளபளப்பான ஒட்டும் தன்மை கொண்ட தேன் போன்ற திரவம் இலை மற்றும் இதர பாகங்களில் தென்படும். தேன் போன்ற திரவத்தின் மேல் 'கேப்னோடியம்' எனப்படும் கரு நிற பூசணம் படர்ந்திருக்கும்.கட்டுப்படுத்தும் மேலாண்மை: பூச்சி தாக்கப்பட்ட பப்பாளி மரங்கள் மற்றும் களைச் செடிகளை அழித்து வயல்களை சுத்தமாக வைக்க வேண்டும். தாக்குதல் குறைவாக இருக்கும்போதே தேவையான கட்டுப்பாட்டு

முறைகளை கையாள வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருடன் 5 சதவிகிதம் வேப்பங்கொட்டைச்சாறு (10 கிலோ / எக்டருக்கு) என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது மீன் எண்ணெய் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 15 கிராம் வீதம் கலந்து அதனுடன் 5 முதல் 10 மில்லி ஒட்டும் திரவம் சேர்த்து தெளித்தல். 'தயோமீத்தாக்சாம்' 2 கிராம் மருந்தினை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தல். குளவி ஒட்டுண்ணியான 'அசிரோபேகஸ் பப்பாயினை' வயலில் விட்டு கட்டுப்படுத்துதல் (ஏக்கருக்கு 50 எண்கள் வீதம்) போன்ற வழிமுறைகளை கையாண்டால் பப்பாளியில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த முடியும்.- பூபதி, தோட்டக்கலை துணை இயக்குனர், மதுரை.

## விதை வாங்கும் விவசாயிகளுக்கு ஒப்பற்ற ஒன்பது ஆலோசனைகள்



தமிழக வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்கப்படுகிறது. விதை ஆய்வாளர்களிடம் ஆலோசனை பெற்று விதைகள் வாங்கும்போது பயிர் உற்பத்தி லாபகரமாக இருக்கும். எனினும் விவசாயிகள் பலர் தரம் குறைந்த விதைகளை தனியாரிடம் வாங்கி ஏமாறக்கூடாது. விதை கொள்முதல் விஷயத்தில் விவசாயிகள் கவனமுடன் இருக்க வேண்டும் என்பதற்காக ஒப்பற்ற ஒன்பது ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.* உரிமம் பெற்ற விதை விற்பனை யாளர்களிடம் மட்டும் விதைகள் வாங்க வேண்டும்.* வாங்கிய விதைக்குரிய விற்பனை பட்டியலை (ரசீது) கேட்டு வாங்கி பயிர் காலம் முடியும் வரை பத்திரமாக வைத்திருக்க வேண்டும்.* விற்பனை பட்டியலில் குறிப்பிட்டுள்ள பயிர், ரகம், குவியல் எண், காலாவதி நாள் போன்றவற்றை சரி பார்த்து வாங்கவும்.* விதை சிப்பத்தில் சான்றட்டை மற்றும் உற்பத்தியாளர் அட்டை கட்டுப்பட்டுள்ளதா என்று சரிபார்த்து வாங்க வேண்டும்.* உண்மை நிலை விதை என்றால் அதில் விபர அட்டை உள்ளதா என பார்த்து வாங்க வேண்டும்.* சான்று பெற்ற, பூச்சி நோய் தாக்குதலால்

சேதம் அடையாத விதைகளை வாங்க வேண்டும்.* திறந்த நிலையில் உள்ள மூடை, பை இருப்புகளில் இருந்து விதைகள் வாங்க வேண்டாம்.* காலாவதி தினத்திற்குள் விதைக்க வேண்டும்.* ஒன்றுக்கு மேற்பட்ட ரகங்களை பயிர் செய்யும்போது விதை சிப்பங்களை தனித்தனியாக ஊற வைக்க வேண்டும். விதை வாங்கும் விவசாயிகள் மேற்கண்ட ஒன்பது யோசனைகளை பின்பற்ற வேண்டும்.- இளங்கோ, விதை ஆய்வு துணை இயக்குனர், மதுரை.

## பறவையை விரட்டு வலை



விளை பொருட்களையும், காய்கறி செடிகளையும் சேதம் செய்யும் பறவைகளால் இழப்பு ஏற்படாமல் தடுக்க தமிழக அரசு மானிய விலையில் பறவை வலை தரும் திட்டத்தை தோட்டக்கலைத்துறை மூலம் அறிமுகம் செய்துள்ளது. மலைப்பகுதியில் உள்ளவர்கள் மயில்களால் சேதம் ஏற்படுவது குறித்து, விவசாயிகள் குறைதீர் முகாம் கூட்டங்களில் முறையீடு செய்து வந்ததால் விவசாயிகள் நலன் பேணிட பறவை வலைகள் பெரிதும் உதவும் என அரசு கருதியது. காய்கறி நாற்று, வெங்காயம், தக்காளி என எந்த பயிரையும் விட்டு வைக்காமல் மயில் மற்றும் பறவைகள் பலவித தொல்லைகள் தரும் பகுதியில் நான்கு பக்கமும் விவசாயிகள் மீன் பிடி வலை போன்ற பெரிய ஓட்டைகள் உடைய நைலான் கயிற்றால் பின்னப்பட்ட உறுதியான வலைகள் பராமரித்திட அதிக செலவு வராது.நல்ல உறுதியான கம்பு ஊன்றி அதிக வலைகளை தொங்க விட்டால் போதும். ஏதேனும் பறவை பறந்து வந்தாலும் வலையில் சிக்கினால் பிறகு தன் முயற்சியில் விடுவித்து கொண்டால் திரும்ப வருவதை தவிர்த்து விடும். இதை 'பறவை விரட்டும் வலை' என்று குறிப்பிடுகின்றனர். பழ மரங்கள் மற்றும் பலன் தரும் மரங்களில் கூட சில பறவைகள் அமர்ந்து உணவுக்காக தானியங்களை உண்டு வருவதும், சில பகுதிகளில் நீர் அருந்த வரும் பறவைகள் அங்கேயே தங்கி இனப்பெருக்கம் செய்வதும் உண்டு. மானியத்தில் பறவை வலை தேவைப்படுவோர் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.- இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குனர், உடுமலைப்பேட்டை.

# தொட்டுத் தொடருது 'பாண்டியூர் பட்டு'



பட்டு என்றாலே சட்டென நினைவுக்கு வருவது காஞ்சிபுரம். தற்போது தமிழகம் முழுவதும் சிறு, குறு விவசாயிகள் பட்டு வளர்ப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பட்டு வளர்ப்புக்கு அதிகளவு மானியம் கிடைப்பதாலும், வருவாய் இரட்டிப்பு என்பதாலும் பட்டு வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.தமிழகத்தின் வறட்சி மாவட்டங்களில் ராமநாதபுரம் முதலிடம் வகிக்கிறது. எனினும் மீன் வளர்ப்பை அடுத்து விவசாயத்திலும் விவசாயிகளின் கவனம் திரும்பி வருகிறது. ராமநாதபுரம் அருகே பாண்டியூர் கிராமத்தில் அரசு பட்டு வளர்ச்சித்துறை உள்ளது. இங்கு வீரிய ரக மல்பெரி நாற்று உற்பத்தி மற்றும் இளம்புழு வளர்ப்பு மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு 4.36 ஏக்கர் நிலத்தில் 2 லட்சம் மல்பெரி நாற்றுகள் வளர்க்கின்றனர். 2 ஏக்கரில் இளம்புழு வளர்ப்பு மற்றும் விதைக்குச்சி பராமரிப்பு நடக்கிறது. மல்பெரி நாற்று ஒன்றுக்கு ரூ.1க்கு விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். இங்கிருந்து பல்வேறு மாவட்டங்களுக்கு மல்பெரி நாற்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.பட்டு வளர்ச்சித்துறை பாண்டியூர் பிரிவு உதவி பட்டு ஆய்வாளர் கணேசமூர்த்தி கூறியதாவது: மல்பெரி சாகுபடி மற்றும் பட்டு வளர்ப்பு விவசாயிகள், ஏக்கருக்கு 4,500 நாற்றுகள் வீதம் நட வேண்டும். ஒரு ஏக்கர் மல்பெரி சாகுபடி செய்தால் 200 முட்டை தொகுதிக்கான (ஒரு தொகுதி முட்டை என்பது300 முதல் 500 புழுக்களை கொண்டது) பட்டுப்புழுக்களை வளர்க்கலாம். பாண்டியூர் மையத்தில் இருந்து 100 புழுக்களை வளர்க்க கூலி ரூ.350 மற்றும் ரூ.550 கொடுத்து ஒரு தொகுதி முட்டைக்கான பட்டுப்புழுக்களை வாங்கலாம். இரண்டே மாதங்களில் 300 முட்டை தொகுதி பட்டுப்புழுவில் இருந்து 200 கிலோ பட்டு உற்பத்தி செய்யலாம். மல்பரி தரமாக இருந்தால் 250 கிலோ வரை பட்டு உற்பத்தி செய்யலாம்.தற்போது, சி.எஸ்.ஆர்., எனப்படும் ஒரு கிலோ வெண்பட்டு ரூ.350 முதல் 400 வரை விற்கப்படுகிறது. சி.பி., எனப்படும் மஞ்சள் பட்டிற்கு ரூ.280 முதல் 320 வரை விலை கிடைக்கிறது. இரண்டே மாதங்களில் ஒரு ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்து பட்டுப்புழு வளர்த்தால் ரூ.70 ஆயிரம் வரை சம்பாதிக்கலாம். இரண்டு ஏக்கரில் மல்பெரி வளர்த்தால் ஒன்று மாற்றி ஒன்று என தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை ரூ.70 ஆயிரம் வருவாய் பெறலாம்.பட்டு வளர்ச்சித்துறை சார்பில்,

விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்கள் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கரில் 5,500 மல்பெரி நாற்று வாங்கி விவசாயி ஒருவர் தனது விவசாய நிலத்தில் நடவு செய்தால் அவருக்கு நடவு மானியமாக ரூ.10,500 வழங்குகிறோம். முட்டை வளர்க்க 1,000 சதுர அடியில் கொட்டகை அமைக்க வேண்டும். சுற்றிலும் மரங்கள் உள்ள இடமாக இருக்க வேண்டும். அல்லது ஈரப்பத நிலை உள்ளதாக இருக்க வேண்டும். இந்த கொட்டகை அமைக்க ரூ.87 ஆயிரத்து 500 மானியம் வழங்குகிறோம். சொட்டு நீர்ப்பாசனத்திற்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம், மல்பெரி பறிப்பு கருவி, மருந்து தெளிப்பான் உள்ளிட்ட பொருட்களும் மானியமாக வழங்குகிறோம் என்றார். தொடர்புக்கு 99651 03209.

## தொடர் மழை : வேகமாக நிரம்பும் நெல்லை மாவட்ட அணைகள்



திருநெல்வேலி ; நெல்லை , குமரி மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. இதனால் நெல்லை மாவட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலையில் சில நாள்களாகப் பெய்துவரும் கனமழையால் நெல்லை மாவட்ட அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது, அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழையால் பாபநாசம், சேர்வலாறு, அடவிநயினார், கடனாநதி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தற்போது பாபநாசம் அணையின் நீர்மட்டம் 81.30 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 90.55 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 72.43 அடியாகவும், ராமநதியில் அணை நீர்மட்டம் 62 அடியாகவும் உள்ளது. நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை அம்பையில் 2.2,

ஆய்க்குடியில் 10.2, சேரன்மகாதேவி, சங்கரன்கோவிலில் 2, பாளையங்கோட்டை 1, ராதாபுரத்தில் 5, செங்கோட்டையில் 15, சிவகிரியில் 3, தென்காசியில் 14 மிமீ மழை பதிவாகியுள்ளது.

சாகுபடி தேவைக்காக பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளிலிருந்து 1,125 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பருவமழை தீவிரமடைந்து அணைகளில் நீர்மட்டமும் உயர்ந்து வருவதால் நெல்லை, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## ஆரஞ்ச் வைரஸ் தாக்குதல் குறித்து ஆய்வு: ஒன்றிய கூட்டத்தில் தகவல்

கொடைக்கானல்,:கொடைக்கானல் பகுதியில் ஆரஞ்சியில் பூச்சி தாக்குதல் குறித்து ஆய்வு நடத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். கொடைக்கானல் ஊராட்சி அலுவலகத்தில் ஒன்றிய கவுன்சிலர் கூட்டம் நடந்தது. ஒன்றியத்தலைவர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் பட்டுராஜன், கிராம ஊராட்சி அலுவலர் குமரேசன் முன்னிலை வகித்தனர். இதில் கவுன்சிலர்கள் விவாதங்கள் வருமாறு: பாக்யராஜ்: அஞ்சு வீடு பகுதியில் மின் விளக்குகள் இல்லை. யானை நடமாட்டத்தால் பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லை. பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சோலார் மின்வேலிகள் அமைக்க வேண்டும்.தலைவர்: விவசாயிகளின் தோட்டங்களுக்கு சோலார் மின்வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மானியம் அளிக்க தீர்வு காணப்படும்.மலர்சந்தானம்: பூம்பாறை பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் தண்ணீர் வசதி செய்து தரவேண்டும். 4 கி.மீட்டர் துாரம் வரை மாணவர்கள் நடந்து செல்லும் நிலை உள்ளது. அரசு பஸ் இயக்கவும் பள்ளி மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையம் பயன்பாடு இல்லாமல் உள்ளது. பட்டுராஜன் (பி.டி.ஓ) உயர் அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்படும்.தவசி: பொதுநிதி இருப்பு எவ்வளவு உள்ளதுபட்டுராஜன்: ஆரம்ப இருப்பு 12 லட்சத்து75ஆயிரத்து 848, வரவு 33 லட்சம், பொதுநிதி 33 லட்சத்து 97 ஆயிரத்து 187 உள்ளது.தவசி: ஆரஞ்ச் மரங்கள் வைரஸ் தாக்குதலால் அழிந்துள்ளது. தாண்டிக்குடி பகுதிகளில் தோட்டக்கலைத்துறையினர் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.தலைவர்: சம்பவ இடத்திற்கு சென்று வைரஸ் தாக்குதலால் சேதமான ஆரஞ்சு மரங்களை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.ஜெய்சங்கர் (தோட்டக்கலைத்துறை) பசுமை நிதியின் கீழ் 2016 மற்றும் 2017 க்கான திட்டம் இம்மாதம் இறுதியில் மானியத்தில் வழங்க செயல்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

மேல்மலை, கீழ்மலை விவசாயிகள் பயன்பெறலாம், என்றார்.

## திண்டுக்கல்லில் கொடி தக்காளி விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சி

திண்டுக்கல்,:திண்டுக்கல்லில் மழை, வெயிலில் அழியும் நாட்டுத் தக்காளியை காட்டிலும் கொடியில் விளையும் தக்காளி விளைச்சல் அதிகமாகியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். திண்டுக்கல்லில் நாட்டு தக்காளி ஒட்டன்சத்திரம், அய்யலுார், வடமதுரை, சாணார்பட்டி, ஏ.வெள்ளோடு உட்பட பல இடங்களில் பயிரிடப்படுகிறது. இது லேசான மழை பெய்தாலும், வெயில் அடித்தாலும் தாக்கு பிடிக்க முடியாமல் அழுகி விடும். இதனால் திண்டுக்கல் விவசாயிகள் கொடி தக்காளிக்கு மாறியுள்ளனர். இது மழை, வெயிலுக்கு தாக்குப் பிடிக்கும். மேலும் அதிக மகசூல் தரக்கூடியது. பூச்சித் தாக்குதலும் குறைவாக இருக்கும். இந்த தக்காளி விளைச்சல் அதிகமாகியுள்ளதால், திருச்சி, தஞ்சாவூர் உட்பட பல வெளிமாவட்டங்களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. ஏ.வெள்ளோடு விவசாயி எஸ். செல்வராஜ் கூறியதாவது; கொடி தக்காளியில் இலை சுருட்டுப்புழு, செல்பேச்சி, கருவலை என பல நோய்கள் தாக்குகிறது. இதற்கு தோட்டக்கலைத்துறையினர் ஆலோசனை பெற்று மருந்து தெளிக்கிறோம். நாட்டு தக்காளி மழை, வெயிலால் பாதிப்பு ஏற்படும். இந்தாண்டு மழை இல்லாவிட்டாலும் கொடி தக்காளி விளைச்சல் அதிகமாகியுள்ளது. நாட்டு தக்காளியை விட அதிக மகசூல் கிடைத்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால் மார்க்கெட்டில் நாட்டு தக்காளியை விட கிலோவிற்கு ரூ.10 குறைவாகவே கிடைக்கிறது, என்றார்.

## இடுக்கியில் கனமழை: அணைகள் திறப்பு

மூணாறு இடுக்கி மாவட்டத்தில் பெய்து வரும் கன மழையினால், அணைகளில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. முழு கொள்ளளவை எட்டிய இரண்டு அணைகளில் இருந்து நேற்று முன்தினம் இரவு தண்ணீர் திறந்து விடப்பட்டது.இடுக்கி மாவட்டத்தில் தென் மேற்கு பருவ மழை கடந்த 8ல் தொடங்கியபோதும்,ஆரம்பத்தில் இரண்டு நாட்கள் பலத்த மழை பெய்தது.அதன்பின்பு மழை சற்று குறைந்து காணப்பட்டது. 26ம் தேதி முதல் மழை வலுத்து கனமழை பெய்து வருகிறது. மழையால் நேற்று மாலை வரை பெரிய அளவிலான பாதிப்புகள் எதும் இல்லை. சிறு,சிறு பாதிப்புகள் ஏற்பட்டன. அணைகள் திறப்பு: மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால், தண்ணீர் வரத்து அதிகரித்து நீர்

மட்டம் உயர்ந்து வருகின்றது. மூணாறு அருகில் உள்ள கல்லார்குட்டி மற்றும் பனங்குட்டி பகுதியில் உள்ள லோயர் பெரியார் ஆகிய அணைகள் முழு கொள்ளளவை எட்டியதால்,நேற்று முன்தினம் இரவு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆகவே அணையின் கரையோரம் இருக்கும் மக்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் வலியுறுத்தியுள்ளது.தொடர் மழை: மூணாறில் மூன்று நாட்களாக பெய்து வரும் கன மழை நேற்றும் தொடர்ந்தது. மழையின் அளவு ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருவதால், மக்கள் பீதியடைந்துள்ளனர். 27ல் 11.37 செ.மீ மழை பெய்த நிலையில், நேற்று காலை நிலவரப்படி கடந்த 24 மணி நேரத்தில் 12.39 செ.மீ., மழை பதிவானது. நேற்று பகலிலும் மழை வெளுத்துக் கட்டியது.மழையின் மூலம் தேவிகுளம் ரோட்டில் உள்ள புனித மேரிஸ் தேவாலய வளாகத்தில் மண் சரிவு ஏற்பட்டது.இதேபோல் கே.டி.எச்.பி., கம்பெனிக்குச் சொந்தமான சொக்கநாடு எஸ்டேட் தேயிலை தொழிற்சாலையின் சுற்றுச் சுவர் இடிந்து, அருகில் வசிக்கும் துரைசாமியின் வீடு சிறிய அளவில் சேதமடைந்தது. பாதிப்பு: இக்கம்பெனிக்குச் சொந்தமான சில தேயிலை எஸ்டேட்டுகளில் தொழிலாளர்கள் பலத்த மழையின் மூலம் நேற்று பணிக்குச் செல்ல இயலவில்லை. பல எஸ்டேட்டுகளில் தொழிலாளர்கள் மழையையும் பொருட்படுத்தாமல் பணிக்குச் சென்றனர்.இவர்களுக்கு முழு நேர பணியை நிர்வாகம் தவிர்த்து பகல் 2 மணியுடன் பணியை நிறுத்தியது. நிறுத்தம்: மாட்டுபட்டி அணையில் நேற்று இ
ரண்டாவது நாளாக சுற்றுலா படகுகள் இயக்கப்படவில்லை. கொட்டும் மழையைக் கண்டு சுற்றுலா பயணிகள் வெளியில் வர அஞ்சி தங்கும் விடுதிகளில் முடங்கியதால், சுற்றுலா பகுதிகள் முழுவதும் வெறிச்சோடி காணப்பட்டன.

## எலுமிச்சை விலையில் சரிவு

ஆண்டிபட்டி, மாவட்டத்தில் பயன்பாடு குறைந்ததால் எலுமிச்சை பழங்கள் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. சுப நிகழ்ச்சிகள், கோயில் வழிபாடுகள் போன்றவற்றில் எலுமிச்சை பழங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. உடல் சூட்டை தணிக்கவும், உணவில் சுவைக்காகவும் எலுமிச்சை பழங்கள் அளவோடு பயன்படுத்தப்படுகிறது.மாவட்டத்தில் அகமலை, கன்னக்கரை, கும்பக்கரை, அடுக்கம், கொடைக்கானல் சார்ந்துள்ள மலைப்பகுதிகளில் எலுமிச்சை சாகுபடி அதிகம் உள்ளது. இங்கு விளையும் எலுமிச்சை பழங்கள் மாவட்டத்தின் தேவையை பூர்த்தி செய்வதுடன் வெளி மாவட்டங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. குறைந்ததுகடந்த சில மாதங்களாக நிலவி வந்த கோடை வெப்பத்தால் எலுமிச்சை பழங்களுக்கான தேவை அதிகம் இருந்தது. இதனால் பழங்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவியதுடன் விலையும்

கிலோ ரூ. 150 முதல் 200 வரை இருந்தது. வியாபாரிகள், விவசாயிகளுக்கு போதுமான விலையும் கிடைத்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் குறைந்து, அதிகமான காற்று குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவுகிறது.இதனால் எலுமிச்சை பழங்கள் அதிகம் பயன்படுத்தப்படும் குளிர்பானங்களின் பயன்பாடு குறைந்து விட்டது. ஏப்ரல், மே மாதங்களில் கிராம கோயில் விழாக்கள் அதிகம் இருக்கும். இந்த விழாக்காலங்களிலும் பழங்களுக்கு தேவை அதிகரித்ததால், தட்டுப்பாடு ஏற்பட்டது. தற்போது விழாக்கால சீசனும் இல்லை. பயன்பாடும் குறைந்ததால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. ஆண்டிபட்டி எலுமிச்சை வியாபாரி எம்.அய்னார் கூறியதாவது:மலைப்பகுதிகளில் விளையும் தரமான நாட்டு ரக எலுமிச்சை பழங்கள் கடந்த சில நாட்களுக்கு முன் கிலோ ரூ.200 வரை இருந்தது. தற்போது நிலவும் குளிர்ச்சியான சூழலால் பழங்கள் விற்பனை குறைந்துள்ளது. நேற்று எலுமிச்சை பழங்கள் கிலோ ரூ. 70 முதல் 80 வரை இருந்தது. போடி, வருஷநாடு மற்றும் பல்வேறு தரைப்பகுதிகளில் விளைவிக்கப்படும் ஒட்டு ரக எலுமிச்சை பழங்கள் கிலோ ரூ. 30 முதல் 40 வரை மட்டுமே இருந்தது. நாட்டு ரக பழங்களை 10 நாட்கள் வரை இருப்பில் வைத்து பயன்படுத்தலாம். ஒட்டுரகங்கள் மூன்று நாட்களில் கெட்டு விடும். விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதால், நஷ்டத்தை தவிர்க்க எலுமிச்சை பழங்கள் பறிப்பதை விவசாயிகள் குறைத்துள்ளனர். சீதோஷ்ணம் மாறினால் பயன்பாடு மீண்டும் அதிகரிக்கும், என்றார்.

**நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர்: கர்நாடகாவில், காவிரி நீர்பிடிப்பு பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால், கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

ஆண்டுதோறும் ஜூன் முதல்வாரம், கர்நாடகாவில், காவிரி உற்பத்தியாகும் குடகுமலை பகுதியிலும், கபினி உற்பத்தியாகும் கேரளாவின் வயநாடு பகுதியிலும், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடையும்.

நடப்பாண்டு ஜூன் மூன்றாவது வாரம் வரை, இரு அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடையவில்லை. இதனால், நீர் இருப்பு கபினியில், 4 டி.எம்.சி.,யாகவும், கே.ஆர்.எஸ்.,சில் 7 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. இருவாரம் தாமதமாக தற்போது காவிரி, கபினி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இரு நாட்களுக்கு முன், 3,000 கனஅடியாக இருந்த கபினி நீர்வரத்து நேற்று, 16,500 கனஅடியாக அதிகரித்தது.

வினாடிக்கு, 1,500 கனஅடியாக இருந்த கே.ஆர்.எஸ்., அணை நீர்வரத்து நேற்று, 17,600 கனஅடியாக அதிகரித்தது. கடந்த இரு நாளில் இரு அணைகளின் நீர் இருப்பு தலா, 2 டி.எம்.சி., அதிகரித்துள்ளது.

தற்போது கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து காவிரியில், 2,500 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. இரு அணைகளின் நீர்மட்டம் அதிகரிக்கும் பட்சத்தில் காவிரியில் கூடுதல் நீர்திறக்க வாய்ப்புள்ளது.

கூடுதலாக நீர்திறந்தால் மட்டுமே, மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரிக்கும். நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம், 42.51 அடியாகவும், நீர்இருப்பு, 13.41 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 1,489 கனஅடி நீர் அணைக்கு வந்து கொண்டிருந்தது.

## ரூ.5 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல், என்.சி.எம்.எஸ்.,ல், 500 பருத்தி மூட்டை, ஐந்து லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

நாமக்கல் மற்றும் சுற்று வட்டார பகுதிகளான பரமத்தி, திருச்செங்கோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பகுதிகளில், 5,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.

அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், நாமக்கல் என்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம் தோறும், வியாழக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வந்து குவிக்கப்படும்.

நேற்று நடந்த ஏலத்தில், 500 மூட்டை பருத்தி ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது. அவை தரம் பிரிக்கப்பட்டு, விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

அதன்படி, ஆர்.சி.ெஹச்., குறைந்தபட்சம், 4,860 ரூபாய், அதிகபட்சம், 5,692 ரூபாய், டி.சி.ஹெச்., குறைந்தபட்சம், 4,769 ரூபாய், அதிகபட்சம், 5,605 ரூபாய், சுரபிரகம் குறைந்த பட்சம், 4,955 ரூபாய், அதிகபட்சம், 5,515 ரூபாய்க்கும் ஏலம் போனது.

மொத்தம், 500 மூட்டை பருத்தி, ஐந்து லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## தொழில்நுட்ப பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளி பயிற்சி

மல்லசமுத்திரம்:மரப்பரையில், விவசாயிகளுக்கான உளுந்து, பாசிப்பயறு ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பயிர் மேலாண்மை குறித்த, பண்ணை பள்ளி பயிற்சி நடந்தது.

வையப்பமலை அடுத்த, மரப்பரை பஞ்சாயத்து, புளியங்காடு பகுதியில் நேற்று, விவசாயிகளுக்கான உளுந்து, பாசிப்பயிறு தொழில்நுட்ப பயிர் மேலாண்மை பண்ணை பள்ளி பயிற்சி நடந்தது.

வேளாண் அலுவலர் அருள்ராணி தலைமை வகித்தார். தொழில்நுட்ப விளக்கவுரை பற்றி வட்டார தொழில்நுட்ப மேலாளர் பாரதி எடுத்துரைத்தார். பயிற்சியில், பாசி மற்றும் உளுந்து பூச்சிநோய்களை கட்டுபடுத்தும் முறைகள், பயிறு எண்ணிக்கைகளை பராமரித்தல், தரமான உற்பத்தி முறைகள் குறித்த பல்வேறு விளக்கங்களை விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரிகள் எடுத்துரைத்தனர். மரப்பரை சுற்றுவட்டாரங்களை சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## முல்லைப்பெரியாறு அணையில் ஆய்வு செய்ய துணைக்குழு புறப்பட்டது.

தேக்கடி: முல்லைப்பெரியாறு அணையில் ஆய்வு செய்ய துணைக்குழு புறப்பட்டுச் சென்றுள்ளது. அணையில் ஆய்வு மேற்கொள்ள தேக்கடியில் இருந்து அதிகாரிகள் படகில் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு தீவன பயிர் சாகுபடி பயிற்சி 11ம் தேதி நடக்கிறது 11ம் தேதி நடக்கிறது

நாமக்கல், : நாமக்கல்-மோகனூர் ரோட்டில் கால்நடை மருத்துவக்கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 11ம் தேதி தீவனபயிர் சாகுபடி குறித்த பயிற்சி துவங்கப்பட உள்ளது. இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர் அகிலா

கூறியதாவது:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 11ம் தேதி (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு ‘ தீவனப்பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள்’ என்ற தலைப்பில் ஒருநாள் இலவச பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் கறவை மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு உகந்த தீவனப்பயிர் வகைகள், மண்ணின் தன்மைக்கேற்ற தீவனப்பயிர்கள் சாகுபடி, விதைநேர்த்தி செய்யும் முறைகள் உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்படும். இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகலாம். மேலும் விபரங்களுக்கு 04286 266345, 266650 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். வரும் ஜுலை, 9ம் தேதிக்குள் விருப்பம் உள்ளவர்கள் தங்களது பெயரை பதிவு செய்வது அவசியம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## 500 பருத்தி மூட்டை ரூ.9 லட்சத்திற்கு ஏலம்

நாமக்கல், : நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று நடந்த பருத்தி ஏலத்தில் 500 மூட்டை பருத்தி ரூ.9 லட்சத்துக்கு ஏலம் போனது.நாமக்கல்-திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. ஏலத்தில் நாமக்கல், ராசிபுரம், வேலகவுண்டம்பட்டி, நாமகிரிப்பேட்டை, எருமப்பட்டி, பவித்திரம், ராசிபுரம், புதுச்சத்திரம் என மாவட்டம் முழுவதும் இருந்து விவசாயிகள் வந்திருந்தனர். மேலும் ஈரோடு, சேலம், கரூர், தர்மபுரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் பருத்தி ஏலத்தில் பங்கேற்றனர். 500 மூட்டை பருத்தியை வியாபாரிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இந்த பருத்தி மூட்டைகள் சுமார் ரூ.9 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்சிஎச் ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 860 முதல் ரூ.5 ஆயிரத்து 692 வரையிலும், டிசிஎச் ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 769 முதல் ரூ.5 ஆயிரத்து 692 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 955 முதல் ரூ.5 ஆயிரத்து 515 வரையிலும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை திருப்பூர், கோவை, திருச்செங்கோடு, அவினாசி, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

## மானிய விலையில் விவசாயிகளுக்கு விதை நெல்

சேந்தமங்கலம், : நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை வட்டார விவசாயிகளுக்கு, மானிய விலையில் விதைகள் வழங்கப்படும் என வட்டார வேளாண் உதவி இயக்குனர் சவுந்தர்ராஜன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:கொல்லிமலை வட்டாரத்தில், விவசாயிகள் நெல் சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். விவசாயிகளுக்கு தேவையான ஐ.ஆர் 20 ரக விதை நெல், செம்மேடு வேளாண் விரிவாக்க மையத்தில் தயார் நிலையில் உள்ளது. விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் அதிக முளைப்பு திறனுடன் கலப்பு இல்லாத நோய் தாக்காத செழுமையான நாற்றுகளை பெறமுடியும். விவசாயிகளுக்கு நெல் விதை ராகி ஜி.பி.யு. 67 ரகமும் மானிய விலையில் வழங்கப்படும். விதைகள் அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு மானிய விலையில் விதையை வாங்கி பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பவானிசாகர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 1.5 அடி உயர்வு

ஈரோடு, : நீர்பிடிப்பு பகுதிகளில் பருவமழை தீவிரமடைந்ததையடுத்து பவானிசாகர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 1.5 அடி உயர்ந்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மற்றும் வட கேரளாவில் தொடர்ந்து நீடித்து வந்த வறட்சியால் அணையின் நீர்மட்டம் 40 அடிக்கும் கீழே சென்றது.கடந்த 2 மாதங்களாக அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதை நிறுத்தி வைத்த போதிலும் அணைக்கு நீர்வரத்து இல்லாததால் நீர்மட்டம் உயராமல் இருந்தது. இதன் காரணமாக இந்த ஆண்டு காலிங்கராயன் பாசனத்துக்கு ஜூன் 15 முதல் தண்ணீர் திறக்க வேண்டியது தள்ளி போனது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அணையின் நீர்இருப்பு வெகுவாக குறைந்து போனதால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியாமல் போகும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த 3 நாட்களாக நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டம் ஊட்டி, குன்னூர், கூடலூர், கோத்தகிரி, மோயாறு, மசினகுடி, குந்தா, பில்லூர் அணைப்பகுதிகளில் பெய்து வரும் மழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் 29ம் தேதி அதிகபட்சமாக 1740 கனஅடி மட்டுமே நீர்வரத்து இருந்த நிலையில் நேற்று நீர்வரத்து 6316 கனஅடியாக அதிகரித்தது. எனவே 29ம் தேதி 43.24 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 1.5 அடி உயர்ந்து 46 அடியாக காணப்பட்டது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 150

கனஅடி தண்ணீர் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. அணையில் மொத்தம் 3.5 டிஎம்சி நீர்இருப்பு உள்ளது. நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து நீர்வரத்து அதிகரித்திருப்பது விவசாயிகளுக்கு ஆறுதலை அளித்துள்ளது. இருப்பினும், தொடர்ந்து கனமழை நீடித்து நீர்மட்டம் மேலும் அதிகரித்தால் மட்டுமே பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு ஏற்படும் என்பதால் கனமழை நீடிக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.கடந்த ஆண்டு 84 அடி; இந்த ஆண்டு 45 அடியான பரிதாபம்பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த 2015ம் ஆண்டு மே மாத இறுதியில் தென்மேற்கு பருவமழை கனமழையாக பெய்தது. இதன் காரணமாக மே, ஜூன் மாதங்களில் நீர்வரத்து அதிகரித்து கடந்த ஆண்டு ஜூன் 30ம் தேதி அணையின் நீர்மட்டம் 84.05 கனஅடியாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு பருவமழை தாமதமாக துவங்கியதால் நீர்வரத்து குறைந்து தற்போது 46 அடியாக உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு 30ம் தேதி 38 அடி நீர்மட்டம் குறைந்து விட்டது. எனவே தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்தால் மட்டுமே ஈரோடு மாவட்டத்தில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு ஏற்படும் என்பதால் கூடுதல் நீர்வரத்தை விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

## தென்மேற்கு பருவமழை தீவிரம் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு

மேட்டுப்பாளையம்,: தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் மேட்டுப்பாளையம் பவானி ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் நீலகிரி மாவட்டத்திலும் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் பவானி ஆற்றின் நீர் பிடிப்பு பகுதிகளான அட்டப்பாடி,அவலாஞ்சி மற்றும் பில்லூர் அனை பகுதிகளிலும் பலத்த மழை பெய்து வருகிறது. தொடர்ந்து மேட்டுப்பாளையம் பவானி ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. நேற்று மாலை நிலவரப்படி பில்லூர் அனையின் நீர்மட்டம் கடந்த மூன்று நாளில் நான்கு அடிவரை உயர்ந்துள்ளது. அதன்படி அனையின் மொத்த கொள்ளவான 100 அடியில் தற்போது 84 அடி வரை தண்ணீர் உள்ளது. அனைக்கு நீர் வரத்து 3,500 கன அடியாக உள்ளது. அனையில் இருந்து மின்சாரம் எடுக்க 6000 கன அடி தண்ணீர் வெளியேற்றபட்டு வருகிறது. எனவே ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுவதால் ஆற்றின் கரையோரத்தில் உள்ள மேட்டுப்பாளையம், சிறுமுகை, ஆலாங்கொம்பு பகுதி மக்கள் மற்றும் அதன் கரையோரம் வசிக்கும் விவசாயிகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் மேட்டுப்பாளையம் வட்டாச்சியர் பாபுராபட் அறிவுறுத்தியுள்ளார். வெள்ளம்

காரணமாக பவானி பாலம் அருகே உள்ள அம்மன் கோயிலை வெள்ளம் சூழந்துள்ளது. மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீயனைப்பு துறையினர் காவல்துறையினர், வருவாய்துறையினர் மருத்துவ வசதி என அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக வட்டாச்சியர் பாபு ராபட் தெரிவித்துள்ளார்.

## பாரம்பரிய வேளாண்மை விவசாயிகளுக்கு பயிற்சி

ிராலிமலை, : விராலிமலை அருகே உள்ள மேலபச்சக்குடி ஊராட்சியில் வட்டார வேளாண் துறை சார்பில் பாரம்பரிய வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. விராலிமலை வட்டாரத்தைச் சார்ந்த மேலபச்சக்குடி தொகுப்பு கிராமத்தில் தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்கத்திட்டத்தின் கீழ் பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்குரிய விவசாயிகள் பயிற்சி 3 நாட்கள் நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் எட்வர்ட்சிங் தலைமை வகித்தார். மேலபச்சகுடி ஊராட்சித் தலைவர் நல்லுச்சாமி, ஒன்றிய கவுன்சிலர் மருதை ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி விதை அலுவலர் பூபதி வரவேற்றார். 3வது நாள் நடைபெற்ற பயிற்சியில் கோவை அங்கக சான்றளிப்பு துறையின் வேளாண் அலுவலர் சுரேந்தர், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். அங்கக வேளாண்மையின் முன்னோடி விவசாயியான வயலோகத்தைச் சார்ந்த முத்தையா, பராம்பரிய நெல் ரகங்கள், சிறுதானியங்கள் சாகுபடி குறித்தும், தன்னுடைய சொந்த அனுபவங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் மண்புழு உரம் தயாரிப்பு பற்றிய செயல் விளக்கத்தினை விவசாயிகளுக்கு செய்து காண்பித்தார். இப்பயிற்சியில் திரளான விவசாயிகள் கலந்துகொண்டனர். உதவி வேளாண் அலுவலர் சேகர் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சுப்பிரமணி, உதவி வேளாண் அலுவலர் கலைச்செல்வி ஆகியோர் செய்திருந்தனர்.

**சிக்கலில் காளான் வளர்ப்பு பயிற்சி முகாம்**

நாகை, : நாகை மாவட்டம் சிக்கல் வேளாண் அறிவியல் நிலையம், ரிலையன்ஸ் அறக்கட்டளை தகவல் சேவை சார்பில் சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் செயல்விளக்க பயிற்சி வருகிற 11ம் தேதி நடக்கிறது. இதில் காளான் வகை தேர்வு, இடத்தேர்வு, கொட்டகை அமைத்தல், வளர்ப்பு முறை, நோய் மேலாண்மை, சந்தைப்படுத்துதல், அறுவடை செய்தல் போன்ற பல்வேறு தொழில்நுட்பங்கள் விளக்கப்படுகிறது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், பண்ணை மகளிர், இளம் விவசாயிகள், தொழில் முனைவோர் சிக்கல் வேளாண். அறிவியல் நிலையத்தை 04365 246266 என்ற தொலைபேசி எண்ணையும், ரிலையன்ஸ் அறக்கட்டளையின் 1800 4198800 என்ற எண்ணையும் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யலாம். இவ்வாறு வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் அனுராதா தெரிவித்துள்ளார்.